மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண். 13/14

வாக்குமூலம். பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலு | ஜாதி | |
| த/பெ. | நாகுதேவர் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 73 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 21.06.2024-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் மனுவின் பெயரில் மறு குறுக்கு விசாரணை**

**1)** நான் கிரையம் வாங்கிய நபர்கள் உண்ணாமலையம்மாள் சுப்பிரமணி என்றால் சரிதான். உண்ணாமலையம்மாளும், சுப்பிரமணியும் யாரிடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் சிவகாமி அம்மாள் சுப்பையா என்ற கணேசனிடம் கிரையம் வாங்கினார்கள். அந்த மூல ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சிவகாமி அம்மாளும் சுப்பையா என்ற கணேசனும் தாயாரும் மகனும் என்றால் சரிதான். மேற்படி இருவருக்கும் கிரையம் கொடுத்த நபர் யார் என்றால் குப்பம்மாள் என்பவர் கிரையம் கொடுத்தார். அந்த குப்பம்மாள் எந்த தேதியில் யாரிடம் கிரையம் வாங்கினார் என்பது எனக்கு தெரியாது.

2. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 , 31.08.1930 கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்து இருக்கிறேனா என்றால் இல்லை. வாதி என்ன ஆவணம் தாக்கல் செய்தார் என்பதை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். வாதி அவரது பாட்டி காத்தாயி பெயரில் ஏற்பட்ட ஆவணம் தாக்கல் செய்து இருக்கிறார் அந்த ஆவணத்தின் தேதி 31.08.1930 என்றால் எனக்கு தெரியாது. எனக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின் தரப்பினர்கள் பற்றியும் நான்கெல்லை பற்றியும் தெரியாது என்றால் சரிதான். 31.08.1930 தேதிய வா.சா.ஆ.3 ஆவணத்தின் விபரங்கள் தெரியாது என்றால் சரிதான்.

3. பிராதில் மேற்படி விபரங்கள் சொல்லப்பட்டு அதன் அடிப்படையில் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் அவர்கள் சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்துள்ளார்கள் பிராதில் பொய்யாக கட்சி செய்து இருக்கிறார்கள்.

எனக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின் விபரங்கள் நன்கு தெரியும் என்றும் நான் வேண்டும் என்றே வா.சா.ஆ.3 ஆவணத்தில் கட்டுப்பட்ட வில்லங்கச் சொத்தை கிரையம் வாங்கிவிட்டு அதை மறைப்பதற்காக தற்போது அந்த பத்திர விபரங்கள் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. என்னுடைய மூல ஆவணமான குப்பம்மாள் கிரையம் வாங்கிய ஆவணத்தின்படி 1952 ல் கும்மாளுடன் சேர்ந்து வாதியின் பாட்டி காத்தாயி 2 சொத்துக்கள் கிரையம் வாங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பத்திரப்படி ஆவண எண் 803/1952 படி அந்த பத்திரத்தில் கண்ட கிரையம் கொடுத்த நபர் சௌந்தரத்தம்மாள் என்றாலும் அவர்தான் குப்பம்மாளுக்கும் காத்தாயிக்கும் கிரையம் கொடுத்தார் என்றால் அதுப்பற்றி தெரியாது. என்னுடைய மூல ஆவணத்தையே தெரியவில்லை என்று சொல்வது வில்லங்கச் சொத்தை கிரையம் வாங்கிவிட்டு அதை மறைப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வாதியின் பாட்டி காத்தாயி அம்மாளும் என்னுடைய மூல கிரைய தாரர் குப்பமாளும் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள் என்றால் சரியல்ல. குப்பம்மாள் சந்திரசேகரன் என்பவரை திருமணம் செய்து இருக்கிறார்என்றாலும் மேற்படி 1952 கிரைய ஆவணத்திலேயே குப்பம்மாள் கணவர் பெயர் சந்திரசேகரன் என்று குறிப்பிட்டு இருப்பது தெரியுமா என்றால் தெரியும். மேற்படி குப்பம்மாள் தம்பதியினருக்கு செல்லத்தம்மாள், சௌந்தரத்தம்மாள் என 2 பெண் குழந்தைகள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. குப்பம்மாள் கிரையம் வாங்கிய ஆவணம் காத்தாயி கிரையம் வாங்கிய ஆவணங்களின் ஸ்தலப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்த ஸ்தலப்பெயர் வைரேசி புஞ்சை என்றால் எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**